# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்தின் விலகலும் இலங்கை எதிர்கொள்ள உள்ள சவால்களும் - ஒரு வரலாற்று விமர்சனப் பார்வை

**மங்களரூபி சிவகுமார், க. அருந்தவராஜா**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mangalarubysivakumar@yahoo.com, arunn.msu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

நீண்டகால ஐரோப்பிய ஐக்கியத்திற்கு முடிவுகட்டிய நிகழ்வுகளிலொன்றாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அதன் பிரதான உறுப்பு நாடானஇங்கிலாந்தினுடைய திடீர் விலகலை நாம் கருதலாம்.இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்ஐரோப்பாக் கண்டத்தில் ஏற்பட்டிருந்த ஐக்கியத்தின் ஸ்திரத்தன்மை இதனால் சிதறுண்டு போனது. (தினக்குரல், 25 ஜுன், 2016) இத்தகையதொரு முடிவினைத் தீர்மானித்தது அந்நாட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பே என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தினுடைய இம்முடிவானது அந்நாட்டிற்கும், அது சார்ந்திருந்த ஒன்றியத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் நிகழ்வாக மட்டும் அமையாமல் சர்வதேசத்திற்கே பாதிப்பினை உண்டாக்கக்கூடிய ஒரு நிகழ்வாக இது காணப்படுகின்றது. அதுமட்டுமன்றிக் கருத்துக் கணிப்பின் மூலமாக எடுக்கப்பட்ட இத்தகைய முடிவினைச் செயற்படுத்த குறைந்தது இரண்டு வருடங்களாவதுசெல்லும். அந்தளவிற்கு இதில் சிக்கல்கள் பல காணப்படுகின்றன. மேலும் இதனால் எதிர்காலத்தில் ஏற்படப்போகின்ற பாதிப்புக்களை இரண்டு பகுதியினரும் சமாளிப்பதும் சவாலானதே. இங்கிலாந்தினைப் பொறுத்தவரை அது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனேயே அதிகளவிற்குக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வந்தது. கருத்துக்கணிப்புக்கள் வெளியான சிலமணி நேரங்களிலேயே இங்கிலாந்தினதும், பிற நாடுகளினதும் பங்குச் சந்தைகள் சரிய ஆரம்பித்தன. இந்நிலையில் இங்கிலாந்துப் பிரதமரும் தான் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார். கருத்துக் கணிப்பினது முடிவுகள் இங்கிலாந்துப் பிரதமரது பதவி விலகலுடன் மட்டும் நின்றுவிடப் போவதில்லை என்பதே உண்மை. அது இங்கிலாந்தின் பொருளாதாரத்தில் பாதிப்பினை உண்டாக்கும், குடியேற்ற வாசிகளைப் பாதிக்கும்,தொழில் இழப்புக்கள் ஏற்படலாம்,பிற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் எதிர்காலத்தில் இங்கிலாந்தினைப் பின்பற்றலாம்,ஐக்கிய இராச்சியத்திலிருந்து தன்னை விடுவிப்பதற்கும் ஸ்கொட்லாந்து முயற்சிக்கலாம், நாணயப் பெறுமதியில் சரிவு, உணவுத்தட்டுப்பாடு,உலகப் பொருளாதாரத்தின் உறுதியான தன்மைக்குப் பாதிப்புக்கள், ஆங்கில மொழி சர்வதேச மதிப்பினை இழக்கலாம். இவையெல்லாம் இங்கிலாந்திற்கும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கும் உள்ள பொதுவான பிரச்சினைகளாகக் காணப்பட்டாலும்கூட தென்னாசிய நாடுகளிலொன்றான இலங்கையும் பல சவால்களை இதனால் எதிர்நோக்க வேண்டிவரலாம். இலங்கையினைப் பொறுத்தவரை அது தனது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் ஏறத்தாள குறிப்பிட்ட சதவீதமான ஏற்றுமதியினை இங்கிலாந்திற்கே அனுப்புகின்றது. இதனால் இலங்கை வரிச்சலுகையினைப் பெறுவதில் வருங்காலங்களில் சிக்கல்கள் பலவற்றினை எதிர்கொள்ளும். வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதிலும் நடைமுறையில் பிரச்சினைகள் பல ஏற்படலாம். இங்கிலாந்திலுள்ள இலங்கையர்கள் மற்றும் பிற குடியேற்ற வாசிகளுக்கும் இது சவாலாக அமையலாம். கல்வி தொடர்பான சந்தர்ப்பங்கள், வேலைவாய்ப்புக்கள் பாதிக்கப்படலாம். இதனால்தான் இலங்கை ஆரம்பத்திலிருந்தே இங்கிலாந்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதை விரும்பியிருக்கவில்லை. இருப்பினும் இலங்கையானது தனியானதொரு பொருளாதாரக் கொள்கையினை வகுத்துள்ளதெனவும், இது இலங்கை நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தாதெனவும் அரசாங்கம் தற்போது அறிவித்துள்ளது. மேலும் இங்கிலாந்துடன் நேரடியான ஒப்பந்தங்கள் சிலவற்றினை இலங்கையானது எதிர்காலத்தில் செய்யவும் உள்ள அதேநேரத்தில் வேறு பல நாடுகளுடனும்கூடத் தனித்தனியான ஒப்பந்தங்களையும் வருங்காலத்தில் மேற்கொள்ள உள்ளது.

***பிரதான சொற்பதங்கள்***: *நாணயப் பெறுமதி இறக்கம், ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, உலகப் பொருளாதரா மந்தம், இலங்கை*

## ஆய்விற்கான அறிமுகம்

தற்போது உலகம் முழுவதனதும் கண்கள் நோக்குவது இங்கிலாந்தினையே. அதாவது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அது விலகுவதாக எடுத்த அதிர்ச்சியான முடிவே இதற்குக் காரணம். இந்நிகழ்வானது பல்வேறு விமர்சனங்களை தோற்றுவித்திருப்பதுடன் பல எதிர்பார்ப்புக்களையும் உண்டாக்கியுள்ளது. (*தினக்குரல், 2016, ஜுலை, 03*) ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து விலகிய சம்பவத்தினை நிபுணர்கள் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான ஐரோப்பாவின் பெருங்கனவு நொருங்கியதாகக் கூறுகின்றனர். அவ்வகையில் இவ்வமைப்பிலிருந்து வெளியேறிய முதலாவது பெரிய நாடாக இங்கிலாந்தினைக் குறிப்பிடலாம். இங்கிலாந்து மக்கள் இத்தகைய முடிவினை ஏன் எடுத்தார்கள் என்ற வினா ஒருபுறமிருக்க இதனது வெளியேற்றமானது சர்வதேச பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என்பது பொதுவான கருத்து. அதேநேரத்தில் இதனால் இங்கிலாந்து பல பக்கவிளைவுகளையும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள உள்ளது.பிரான்ஸ், நெதர்லாந்து, அவுஸ்திரியா போன்ற நாடுகளும் இங்கிலாந்தினைப் பின்பற்றி விலகுவதற்கான நிலையில் இருப்பதாக ஆய்வாளர்களது கருத்துக்கள் காணப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னதாக மேற்கொள்ளப்பட்ட ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைக்கின்ற முயற்சியின் இறுதி வடிவமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றத்தினைக் கொள்ளலாம். அதாவது வருங்காலத்தில் யுத்தமொன்று ஏற்படுவதனைத் தடுக்கவும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலே உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காகவும் பிராந்தியத் தலைவர்களது முயற்சியினால் இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அவ்வகையில் இதன் ஒரு வடிவமாகவே 1950 களில் நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம் என்ற பெயரில் அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயத்தில் இதில் பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்திருந்தன. (*https://ta.wikipedia.org/s/f4g*) 28 உறுப்பு நாடுகளைக் கொண்டு 1967இல் இவ்வாறான சங்கங்கள் இரண்டுடன் இதுவும் இணைந்து எல்லாமாக மூன்று சங்கங்களும் ஐரோப்பிய சமூகங்கள் என்ற அமைப்பாக மாற்றங் கண்டன. 1973இல் மேலும் இச்சங்கம் விரிவடைந்தது. 1979இல் ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. 1985இல் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலே கடவுச்சீட்டுக்கள் இன்றிப் பயணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. 1986இல் ஐரோப்பியக்கொடி பயன்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டது.

1993இல் முறைப்படி உருவாக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியமானது (Europeon Union) ஏறத்தாள 500 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையினை உள்வாங்கிய ஒன்றியமாக தற்போதுவரை இருந்து வந்திருக்கின்றது. 1995இல் அவுஸ்திரியா, சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகள் இதில் இணைந்தன. 2002இல் 12 உறுப்பு நாடுகள் தங்களது நாணயங்களுக்கப் பதிலாகப் புதிதாக உருவாக்கப்பட்ட யூரோ நாணயத்தினை ஏற்றுக்கொண்டன. பின்னர் யூரோ வலயம் 15 நாடுகளை உள்ளடக்கியதாக விரிவடைந்தது. அவ்வகையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எல்லாமாக 4,423,147 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவினைக்கொண்டு தற்போதுவரை காணப்படுகின்ற எனலாம்.(*https://ta.wikipedia.org/s/f4g*) இவ்வமைப்பானது ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய ஒன்றிய அவை, ஐரோப்பிய நீதிமன்றம், ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய அமைப்புக்களை உள்வாங்கியதொரு அமைப்பாகக் காணப்படுகின்ற அதேநேரத்தில் இதனது நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர்கள் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுகின்றனரென்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வமைப்பானது அங்கத்துவ நாடுகளிடையிலே மக்கள், பொருட்கள், சேவைகள், முதலீடு என்பனவற்றினுடைய கட்டற்ற நகர்வுகளுக்கு உத்தரவாதமளிக்கின்ற பொதுவான சட்டங்களைக்

கொண்ட ஒற்றைச்சந்தையினை உருவாக்கியுள்ளன. மேலும் பொதுவான வர்த்தகக்கொள்கை, விவசாயம், மீன்பிடிக்கொள்கைகள் போன்றவற்றுடன் பிரதேச வளர்ச்சிக்கான கொள்கையினையும் பேணிவருகின்றது.

இத்தகைய நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளிலொன்றான இங்கிலாந்து தான் மக்களது கருத்துக்கணிப்பின் பிரகாரம் அவ்வமைப்பிலிருந்து விலகிக்கொள்ளுவதாக எடுத்துள்ள முடிவானது சர்வதேச அளவில் மாற்றங்கள் பலவற்றினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய பாதிப்புக்கள் இலங்கைக்கும் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. இத்தகைய கருத்துக்கணிப்பில் 52 சதவீதமான மக்கள் விலகலுக்கு ஆதரவாகவும் 48 சதவீதமானவர்கள் எதிராகவும் வாக்களித்திருந்தனர். (*வீரகேசரி, 2016 ஜுன், 26)* தொடர்ந்து பிரிதலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இறுதியில் இருபகுதியினருக்கும் இவ்விடயமாக உடன்பாடொன்றும் எட்டப்படும். தொடர்ந்து இங்கிலாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவதிலிருந்து விலக்குப் பெற்றுவிடும். ஆனால் எதிர்காலத்தில் முதலீட்டாளர்களுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகள் பலவற்றுக்கும் இவ்விடயமானது பொருளாதார, சமூக அடிப்படையில் தாக்கங்களை உண்டாக்குமென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. பொதுவாகவே ஐரோப்பிய ஒன்றியத்தில் முதலீடுகளை மேற்கொள்ளுகின்றபோது அதில் ஏறத்தாள 40 சதவீதமான தொகை இங்கிலாந்தினையே சென்றடையும். *(உதயன், 2016, ஜுன் 26)* இப்பின்னணியிலேதான் ஐரோப்பிய ஒன்றியத்தில் முதலீடு செய்கின்ற நாடுகளை இங்கிலாந்தின் விலகலானது பாதிக்கின்றது.

முதலில் பிரிட்டன் மக்கள் ஏன் இப்படியொரு முடிவினை எடுத்தார்கள் என்று நாம் பார்க்கவேண்டியுள்ளது. கட்டுக்கடங்காமல் போகும் குடியேற்றவாசிகளின் ஊடுருவல்தான் இதற்கு முதற் காரணம். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகினால் மாத்திரம்தான் அதைக் கட்டுப்படுத்த முடியும் என்ற வழி இருந்ததால்தான் அவர்கள் இந்த முடிவினை எடுத்தனர். புதுமணப் பெண்களாக அல்லது புதுமாப்பிளைகளாக வருடம் தோறும் 30000 பேர் பிரிட்டனுக்குள் பின் வழியாக நுளைகின்றனர் என புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்ட ஏற்பாடுகளே இதற்குக் காரணமாகும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் மாத்திரமே இந்தக குடிவரவைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலை இருக்கின்றது. இதனால்த்தான் பிரிட்டன் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். பொருளாதார வீழ்ச்சியை விடவும் குடியேற்ற வாசிகளின் ஊடுருவலையே மிகப் பெரிய ஆபத்தாகக் காட்டியது.

இலங்கை அரசாங்கமானது இலங்கையின் பொருளாதாரத்தில் இச்சம்பவமானது நேரடியான தாக்கங்கள் எவற்றினையும் உடனடியாக ஏற்படுத்தாது என்று கூறியபோதும் மேற்சொன்னவாறு எதிர்காலம்தான் இதற்கான பதிலைச் சொல்ல வேண்டும். இலங்கையினதுஏற்றுமதிப் பொருளாதாரத்தின் இரண்டாவது மிகப்பெரிய சந்தையாக ஐக்கியராச்சியமே விளங்குவது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தகையதொரு பாரதூரமான நிலையானது இலங்கையினைப் பொறுத்து இதுவரை ஏற்பட்டதில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகவே இலங்கை அரசாங்கமானது பல்வேறு உலக நாடுகளுடன் வெவ்வேறான ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுவதற்கு முன்வந்துள்ளது. இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், கொரியா போன்ற ஆசிய நாடுகளுடனான பொருளாதாரத்தினை வலுப்படுத்தவது குறித்து ஆராய்வதற்கு விசேட குழுவினை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

ஆய்வொன்றில் ஆய்வுப் பிரச்சினையென்பது பிரதான இடத்தினைப் பெறுகின்றது. அவ்வகையில் பிரச்சினைக்கான தீர்வுதான் ஆய்வொன்றினது முடிவாக அமையும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து விலகும்போது அதனால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள்தான் ஆய்விற்கான பிரதான பிரச்சினையாக உள்ளது. அதில் பொருளாதாரப் பிரச்சினை என்பது பிரதான இடத்தினை வகித்தாலும் அதனைச் சார்ந்த வகையில் சமூக, கலாசாரப் பிரச்சினைகள் பலவும் கூடவே ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

## ஆய்வின் நோக்கங்கள்

ஆய்வானது பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. இங்கிலாந்தின் விலகலுக்கான உடனடியான மற்றும் பிற காரணங்களை வெளிக்கொணரல்.
2. இங்கிலாந்தின் பொருளாதாரத்திலும் பிற துறைகளிலும் உடனடியாகவும் நீண்டகாலத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்களை எடுத்துக்கூறுதல்.
3. இங்கிலாந்து வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை இனங்காணுதல்.
4. இலங்கையின் சகல துறை வளர்ச்சியிலும் அது எதிர்கொள்ள உள்ள சவால்களை எதிர்வு கூறுதல்.

## ஆய்வு முறையியல்

வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விமர்சன ஆய்வாக அமைகின்ற இவ்வாய்வில் பெருமளவிற்கு பிரதான ஆதாரங்களாகப் பத்திரிகைகளும் இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளும் அமைகின்றன. மற்றும் அரசியல் நிபுணர்கள், வரலாற்றாளர்கள் போன்றவர்களிடமிருந்து நேர்காணல்கள் மூலமாகப் பெறப்பட்ட தகவல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வுப் பிரதேசம்

ஆய்வில் ஆய்வுப் பிரதேசமென எவற்றினையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. காரணம் சர்வதேசமே ஆய்வில் அடங்குகின்றது. இருப்பினும் ஆய்வில் நேரடியாகச் சம்மந்தப்படுகின்ற நாடுகளான இலங்கையும் இங்கிலாந்தும் பிரதான பிரதேசங்களாக உள்ளன.

## சுருக்கமும் முடிவும்

இங்கிலாந்தானது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதாக எடுத்துக்கொண்ட முடிவானது உண்மையில் ஐக்கிய இராச்சிய மக்களது பெரும்பான்மையின் முடிவு அல்ல. தற்போது ஏறத்தாள 30இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மறுவாக்குப் பதிவினை நாடி நிற்கின்றனர். கருத்துக்கணிப்பின் முடிவுகளும் எதிர்பார்க்க முடியாதவையாக அமைந்தன. அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக உள்ள நாடு எது? மீளவும் இங்கிலாந்தில் மற்றொரு கருத்துக்கணிப்பு இடம்பெறுமா? இங்கிலாந்தின் அடுத்த பிரதமர் யார்? போன்ற வினாக்களெல்லாம் இன்று சர்வதேச உலகில் கேட்கப்படுகின்ற வினாக்களாக உள்ளன. இங்கிலாந்தின விலகலானது உலக அரசியல் மற்றம் பொருளாதார நிலமைகளை மறுசீரமைப்புக்கு உட்படுத்தியுள்ளன எனலாம். உண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இங்கிலாந்து நீடிப்பதனை விரும்பாதவர்கள் வலது சாரிகளே. இருப்பினும் இத்தகைய விலகுவதான முடிவினை இங்கிலாந்து

எடுத்திருப்பதனால் அது இனிமேல் பயணிக்க வேண்டிய பாதையானது வித்தியாசமானது. உண்மையில் இதனால் நாடே பிளவுபட்டுள்ளது. வருங்காலத்தில் ஐக்கியராச்சியத்தின் ஒற்றுமைக்கு கேள்வி எழுந்துள்ளது. இலங்கையினைப் பொறுத்தவரை புதிதாக பொருளாதார ஒப்பந்தங்களையும் சில மாற்று வழிகளையும் முன்னேற்பாடாக எடுத்துக்கொள்வது அதற்கு ஆரோக்கியமானதாக அமையும்.